சுருக்கம்

வேளாண்மை – உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள், திட்டத்தினை 2015–16 ஆம் ஆண்டிற்கு 01.04.2015 முதல் 31.03.2016 வரை தொடர் நீட்டிப்பு ஆணை – வெளியிடப்படுகிறது.

---

(வேளாண்மை (வேஉ3) துறை

அரசாணை (2டி) எண்.72

நாள் 12.06.2015
திருவள்ளுவர் ஆண்டு 2046, வைகாசி 29
படிக்கப்பட்டவை

1. அரசாணை (2டி) எண்.37, வேளாண்மை (வேஉ3) துறை, நாள் 13.06.2014.
2. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.ஆகூபி 1/19621/2015, நாள் 06.05.2015.

------

ஆணை

தமிழகத்தில் திருச்சி, கோவில்பட்டி, காஞ்சிபுரம், பரமக்குடி, உதகமண்டலம், கும்பகோணம், கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோவில், தர்மபுரி, சேலம், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் விழுப்புரம் ஆகிய 14 இடங்களில் செயல்பட்டுவரும் உரக்கட்டுப்பாடு ஆய்கங்கள் திட்டத்தைத் தொடர்ந்து செயற்படுத்த 01.04.2014 முதல் 31.03.2015 வரை தொடர் நீட்டிப்பு ஆணை மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் மூலம் வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் வேளாண்மை இயக்குநர், மேற்படி திட்டம் மேலும் ஓராண்டு காலத்திற்கு அதாவது 01.04.2015 முதல் 31.03.2016 வரை நீட்டிப்பதற்கு உரிய கருத்துருவினை, அதன் இன்றியமையாத அவசியத்தை வலியுறுத்தியும் இதற்கான காரணக் கூறுகளையும் அனுப்பி உரிய ஆணையினை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்குறித்த வேளாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலித்து, கருத்துருவை ஏற்றுக் கொண்டு, தமிழகத்திலுள்ள 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் திட்டத்தினை 2015–2016 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக, மேற்படி திட்டத்தை 01.04.2015 முதல் 31.03.2016 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3இல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள திட்டம் குறித்த செலவுகள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2435 – ஏணைய வேளாண்மைத் திட்டங்கள் – 01 – விற்பனை மற்றும் தரக்கட்டுப்பாடு – 101 – விற்பனை வசதிகள் – I – திட்டத்தில் சாராதது – AA –உரக்கட்டுப்பாட்டு ஆணையை செயற்படுத்துதல். (த.தொ.கு.2435–01–101 – AA – 0006) " (ரூ.704.23 இலட்சம்)

“2435 – ஏணைய வேளாண்மைத் திட்டங்கள் – 01 – விற்பனை மற்றும் தரக்கட்டுப்பாடு – 102 – தரம் பிரித்தல் – I – திட்டத்தில் சாராதது – AO –உரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடத்தை நிறுவுதல். (த.தொ.கு.2435–01–101 – AO – 0006) ” (ரூ.76.93 இலட்சம்)

“2401 – 00 – பயிர் வளர்ப்பு – 105 – எருக்களும் இரசாயன உரங்களும் – I – திட்டத்தில் சாராதது – AA – உள்ளூர் எரு ஆதாரங்கள் உட்பட கலப்பு உர மேம்பாடு வேளாண்மை இயக்குநர் பொறுப்பிலுள்ளவை. (த.தொ.கு.2401–00–105 – AA – 0009) ” (ரூ.42.39 இலட்சம்)

5. இவ்வரசாணை, நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.28818/Agri/2015, நாள் 10.06.2015.

//ஆளுநரின் ஆணைப்படி//

ராஜேஷ் லக்கானி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/சென்னை–18(பெயரில்).
சம்மந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்,
சம்மந்தப்பட்ட கணக்கு அலுவலர்கள் (கிழக்கு), சென்னை–8.
முதன்மைப் பொதுக் கணக்கு அலுவலர் , சென்னை–18.
முதன்மைப் பொதுக் கணக்கு அலுவலர், சென்னை–18.
உள்ளுரை அலுவலர், சென்னை–9.

நகல்
மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
நிதி(வேளாண்மை)துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு3) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பி. பிரபாவதி 15-6-2015
பிரிவு அலுவலர்
15/6/15